வாக்குமூலம்
**நீதித்துறை நடுவர் எண்.2, நீதிமன்றம், திண்டுக்கல்,**
**வழக்கு எண்.355/2013**
**வழக்கு சாட்சி. 5**

| | | |
|---|---|---|
| பெயர் | : | நசீர்பாட்சா |
| தந்தை பெயர் | : | குலாம் தஸ்தகீர் |
| கிராமம் | : | திண்டுக்கல் |
| தாலுக்கா | : | திண்டுக்கல் |
| ஜாதி | : | |
| தொழில் | : | சார்பு ஆய்வாளர் ( ஓய்வு) |
| சமயம் | : | |
| வயது | : | **66** |

**17.04 .2023**

**எதிரி ஆஜர்.**

**எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 311ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.**

**குறுக்கு விசாரணை .**

1) இவ்வழக்கின் புகார் நீதிமன்றத்தின் சிஆர்எம்பி மூலமாக உத்தரவு அனுப்பபட்டு அதன் மூலமாகத்தான் முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டது என்றல் சரிதான். புகார் சம்மந்தமாக காவல்நிலையத்திற்கு தகவல் கிடைத்தது 12.10.2009ம் தேதி என்றால் சரிதான். அ.சா.1 எங்களது காவல்நிலையத்தில் எந்த எழுத்து மூலமான புகார் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.1 எதிரியிடம் பணம் கொடுத்ததற்கான எந்த ஆதாரமும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.1 பணம் கொடுத்ததற்கான விவரத்தை புகாரில் சொல்லவில்லை என்றால் சரியல்ல..

2) எதிரியுடன் பணிபுரிந்த தங்கம் என்பவர் அ.சா1யிடம் பழக்க வழக்கம் இருந்த கண்ணன் என்பவர் அசா1ஐ ஏமாற்றியதற்கு உடன் பணிபுரிந்த எதிரியை வேண்டுமென்றே அ.சா.1 பொய் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. புகாரில் அ.சா.1 எதிரியிடம் பணம் கொடுக்கும் போது யார் உடன் இருந்தார் என்பது பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 2 நாட்கள் காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பபட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு ஆவணங்கள் அனைத்தும் பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்எறால் சரியல்ல. அசா1 எதிரியிடம் எந்த விதமான பணமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

N MEENATCHI

Digitally signed by N MEENATCHI
Date: 2023.04.24 14:36:10 +0530

Judicial Magistrate No.II
Dindigul.